

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (20.08.2025) அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி சுவாமி தரிசனம் செய்ய மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் உடனிருந்தார்.

### திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில்

# பக்தர்கள் எளிதாக தரிசனம் செய்ய நடவடிக்கை!

## பணிகளை ஆய்வு செய்தபின்- அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

திருவண்ணாமலை, ஆக. 22 -

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வவேலு நேற்று முன்தினம் (20.08.2025) அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி சுவாமி தரிசனம் செய்ய மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது திருவண்ணா மலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், உடனிருந்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வவேலு நேற்று முன்தினம் அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் இராஜகோபுரம் எதிரில் பக்தர்கள் கட்டணமில்லா தரிசனம் மேற்கொள்ள அரசு சார்பில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், வரிசைகள் (QLine) ஏற்படுத்துவது குறித்தும், வட ஒத்தவாடை தெருவில் காத்திருப்பு வரிசைகள் அமைக் கப்பட்டு வரும் பணியினையும், கிரிவலப்பாதை, ஆணாய்பிறந்தான் பகுதியில் அரசு அருங்காட்சியகம் அமையுள்ள இடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது அமைச்சர் எ.வவேலு செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்கு வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து அதிகளவில் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கு வருகை புரிகின்றனர். மேலும், வார விடுமுறை நாட்கள், பௌர்ணமி தினங்கள் மற்றும் கார்த்திகை தீப திருவிழா நாட்களில் இலட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு கிரிவலம் வருகின்றனர். அவ்வாறு வருகின்ற பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி சுவாமி தரிசனம் செய்யவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் அரசு சார்பில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன்தொடர்ச்சியாக இன்றைய தினம் இராஜகோபுரம் எதிரில் உள்ள பகுதியில் இருந்து கட்டணமில்லாமல் பக்தர்கள் எளிதாக சுவாமி தரிசனம் செய்ய வரிசைகள் (Line) அமைக்கப்பட உள்ள பணிகள் குறித்து பொதுப்பணித்துறை தொழில்நுட்ப வல்லுநர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், வட ஒத்தவாடை தெருவில் காத்திருப்பு வரிசைகள் அமைக்கப்பட்டு வரும் பணியும் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவடைந்தால் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பது தவிர்க்கப்படும் என்று பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின் போது, மாநில தடகள சங்க துணைத்தலைவர் மரு. எ. வ.வே.கம்பன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், பொதுப்பணித்துறை தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களின்

# கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 22 -

வேலூர் மக்களவைத் தொகுதியில் கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதில் தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆற்றிய பணிகள் குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு களை மேம்படுத்துவதில் தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆற்றிய பங்கின் விவரங்கள் தருக? மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் NRLM இன் கீழ் இளைஞர்களின் வேலைவாய்ப்பு நிலை மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்று அவர் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் அமைச்சர் கம்லேஷ் பாஸ்வான் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

ஒன்றிய அரசு கொடை திட்டங்களில் தீனதயாள் அந்த்யோதயா யோஜனா தேசிய கிராமப்புற வாழ்வாதார மிஷன் (DAY-NRLM) திட்டத்தின் கீழ், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் பின்வரும் இரண்டு மத்திய நிதியுதவி திட்டங்களை செயல்படுத்துகிறது, அதாவது தீனதயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (DDU-GKY) & கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETI) ஆகியவை கிராமப்புற ஏழை இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக, அவர்களின் லாபகரமான வேலைவாய்ப் புக்காக, தமிழ்நாடு உட்பட நாட்டில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் செயல்படுத்தப்படுகின்றன.

திட்டங்கள் பற்றிய சுருக்கம் பின்வருமாறு:

i. தீனதயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (DDU-GKY): DDU-GKY என்பது 15-35 வயதுக்குட்பட்ட கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டமாகும். இது கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறன்களை வழங்கி, வழக்கமான தொழிலாளர் வேலை வாய்ப்பு சந்தைகளில் அவர்கள் பங்கேற்பதை எளிதாக்குகிறது, இதனால் அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தில் அல்லது அதற்கு மேல் வழக்கமான மாத ஊதியம் கொண்ட வேலைகளை வழங்குகிறது. DDU-GKY வழிகாட்டுதலின் படி

SC/ST (50%), பெண்கள் (33%) மற்றும் PwDs (5%) ஆகியோரை சமூக ரீதியாக உள்ளடக்குகிறது.

ii. கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs): RSETI என்பது வங்கி தலைமையிலான கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் (MoRD) நிதியுதவியுடன் கூடிய பயிற்சி நிறுவனமாகும், இது அவர்களின் மாவட்டங்களில் ஸ்பான்சரிங் வங்கிகளால் நிறுவப் பட்டது, இது திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான பயிற்சியை வழங்குகிறது.

RSETI கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு MoRD நிதி உதவி வழங்குகிறது மற்றும் ‘கிராமப்புற ஏழை’ பயனாளர் பயிற்சி அளிப்பதற்கான செலவையும் ஏற்கிறது.

சுயதொழில் அல்லது தினக் கூலி வேலைவாய்ப்பை மேற்கொள்ளும் திறன் கொண்ட 18-50 வயதுடைய எந்தவொரு வேலையற்ற இளைஞரும் RSETI இல் பயிற்சி பெறலாம். பயிற்சி பெற்ற சில பயனர்கள் வழக்கமான சம்பள வேலைகள் / கூலி வேலைவாய்ப்பையும் நாடலாம்.

தமிழ்நாட்டின் வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் 2014-15 நிதியாண்டு முதல் 2025-26 வரை ஜூன் 2025 வரை NRLM இன் கீழ் DDU-GKY & RSETI திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்ற/இடமளிக்கப்பட்ட/குடியேற்றப்பட்ட இளைஞர்களின் விவரங்கள் பின்வருமாறு: -

வேலூர் மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1446 பேர் சேர்க்கப்பட்டு 814 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 9998 பேர் சேர்க்கப்பட்டு 6772 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1387 பேர் சேர்க்கப்பட்டு 908 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 2943 பேர் சேர்க்கப்பட்டு 2193 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1283 பேர் சேர்க்கப்பட்டு 755 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 2891 பேர் சேர்க்கப்பட்டு 2054 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.



விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு நாளை முன்னிட்டு அவரது மணிமண்டபத்தில் அமைந்துள்ள ஒண்டிவீரன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நமச்சிவாயம், அலிஃப் மீரான், வேங்கை வெங்கடேஷ், பத்மராஜ், கேபிள் குமரேசன், ஷெட்டி, வினோத் குமார், அந்தோணிராஜ், ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.




சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் அண்ணா அறிவகத்தை. வார் ரூம் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார். உடன் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சுரேஷ் , மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஜி.எஸ்.டி. வரி விதிப்பு: வருவாய் இழப்பை ஈடுசெய்ய

# இழப்பீட்டு மேல்வரியினை நீட்டிக்க வேண்டும்!

## புதுடெல்லியில் நடைபெற்ற அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!



**புதுடெல்லி, ஆக. 22 -**

**புது தில்லியில் நேற்று முன்தினம் (20-08-2025) நடைபெற்ற ஆயுள் மற்றும் சுகாதார காப்பீட்டிற்கான அமைச்சர்கள் குழுக் கூட்டம் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டு மேல்வரியினை மறு உருவாக்கம் செய்வதற்கான அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறையில் தமிழ் நாட்டின் நிதி ஆதாரத்தினை பாதுகாக்க வேண்டி விரிவாக வலியுறுத்தினார்.**

இது குறித்து அவர் பேசியது வருமாறு:-

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை சீரமைக்கும் முனைவுகள் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், மாநிலங்களின் நிதி ஆதாரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் பெரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், இதற்கான செலவினங்களைக் குறைக்கும் வகையில் வரி சீரமைப்பு வழிவகுக்கக்கூடாது.

குறிப்பாக சமூக நலத்துறையில், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் சுகாதாரம் மற்றும் கல்வியில் முதலீடு செய்வதன் மூலம் முழு மனித ஆற்றலையும் அடைவதற்கான வழியைக் காட்டுகின்றன. எனவே ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மேற்கொள்ளும் வரிசீரமைப்பு முனைவுகள் ஒவ்வொரு மாநிலத்தின் வருவாயை பாதுகாக்கும் விதமாக அமைந்திட வேண்டும்.

**மாநிலத்தின் வருவாயை பாதிக்கும்!**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை சீரமைக்கும், தருணத்தில் இழப்பீட்டு மேல்வ ரியும் முடிவுக்கு வரவுள்ளது. ஒரே நேரத்தில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதக் குறைப்பு மற்றும் இழப்பீட்டு மேல்வரியினை நீக்குவது ஆகியன மாநிலத்தின் வருவாயை கணிசமாக பாதிக்கும்.

எனவே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகித மறு சீரமைப்பு காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுசெய்ய இழப்பீட்டு மேல்வரியினை நீட்டிக்க வேண்டும்,

தற்போது மேல்வரி விதிக்கப்பட்டு வரும் பொருட்கள் மீது, இழப்பீட்டு மேல்வரியினை தொடர இயலாத நிலையில், மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை குறைப்பதற்கு, மாற்று வழிமுறை செய்யப்பட வேண்டும் .

**கடன் உச்சவரம்பை உயர்த்த வேண்டும்!**

இழப்பீட்டு மேல்வரியினை 4 முதல் 6 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு வருவாய் இழப்பை ஈடுசெய்ய மாநிலங்களுக்கு மட்டும் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்றும் உடனடி தீர்வாக மாநிலங்களின் நிகர கடன் உச்சவரம்பை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவிகிதமாக எவ்வித நிபந்தனையும் இல்லாமல் உயர்த்தப்பட வேண்டும் .

மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதத்தை மறுசீரமைப்பதில் தேவையான ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தினார்.

### கோவை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் துணை அமைப்பாளர்

# த.வீரமணி இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி!

## முன்னாள் அமைச்சரும் – கோவை மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில்பாலாஜி தலைமை!

கோவை, ஆக. 22 -

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மற்றும் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல்வாழ்த்துக்களுடன், கோவை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் துணை அமைப்பாளரும் பொள்ளாச்சி சித்த மருத்துவ டாக்டர் கோபால் அவர்களின் நண்பருமான த.வீரமணி - பொள்ளாச்சி நகர மன்ற முன்னாள் உறுப்பினர் வீ.கவிதா ஆகியோரின் அன்பு மகள் வீ.ஜனனி - பி.ரவிச்சந்திரன், ஆர்.விஜய லட்சுமி ஆகியோரின் அன்புமகனுமான ர.வினித்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு விழா வருகிற 27.08.2025 புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், பொள்ளாச்சி கோவை சாலையில் அமைந்துள்ள ஸ்ரீசக்தி கன்வென்சன் சென்டரில்,

முன்னாள் அமைச்சரும் - கோவை மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில்பாலாஜி, எம்.எல்.ஏ., தலைமையிலும் - கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், மாநில விவசாய அணி துதணைத் தலைவர் இரா. தமிழ்மணி, பொள்ளாச்சி வடக்கு நகர பொறுப்பாளர் இரா.நவநீதகிருஷ்ணன், பொள்ளாச்சி தெற்கு நகர பொறுப்பாளர் எம்.அமுதபாரதி ஆகியோர் முன்னிலையிலும் -

நகர பொருளாளர் நா. ஆகிமூர்த்தி அவர்கள் வரவேற்புரையாற்றிட - தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத் தலைவரும் - மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளருமான திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி, கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் வரதராஜன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் டாக்டர் மகேந்திரன், கழக தீர்மான குழு உறுப்பினர் ஜி.ஏ.அதிபதி, மாநில நெசவாளர் அணிச் செயலாளர் கே.எம்.நாகராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே. எஸ்.சபரிகார்த்திகேயன், நகர்மன்றத் தலைவர் திருமதி சியாமளா நவநீதகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார், நகர்மன்ற துணைத் தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் அமைப்பாளர் லட்சுமி நாச்சிமுத்து, மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் துணை அமைப்பாளர்கள் கே.ஆறுமுகசாமி, சண்முகம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் அமைப்பாளர் தமிழ்செல்வன் நெகமம் தமிழ்சபதி, எம்.சி., ஆகியோர் வாழ்த்துரையில் நடைபெற உள்ளது.



நெல்லை மாநகராட்சி மகளிர் கல்லணை மேல்நிலைப் பள்ளியில் பயின்று மருத்துவத்துறை நுழைவுத்தேர்வில் 20252026 தமிழ்நாடு அரசின் 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டில் வெற்றி பெற்ற 5 மாணவிகளான ஆசிபா, நந்தினி, மகா ஸ்ரீ லாவண்யா, வரகுணமங்கை, சக்தி ஆகியோர்களுக்கு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வாழ்த்துக்கள் தெரிவித்து ஸ்டெதஸ்கோப் மற்றும் கேடயம் வழங்கி பாராட்டினார். நிகழ்வில் அலிஃப் மீரான், சுப்பையா, கேபிள் குமரேசன், மைக் மணி, சார்லஸ் முத்து ராஜ், மகாராஜன், செந்தில்குமார், அந்தோணிராஜ், வினோத் குமார், பிந்து செய்யது, சுப்புலட்சுமி, மாரிமுத்து மற்றும் பெற்றோர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.